ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

वयसि गते कः कामविकारः शुष्के नीरे कः कासारः ।
क्षीणे वित्ते कः परिवारो ज्ञाते तत्वेकस्संसारः ॥

वयसि - ஆயுளானது

गते - அதிகமாகச் சென்றுவிட்டால்

कामविकारः - ஸ்திரீவிஷயமான இச்சையானது

कः - எப்படி உண்டாகும்

नीरे - ஜலமானது

शुष्के - பூருவும் வற்றிப்போனபிறகு

कासरः - தடாகமென்கிறபெயர் - எது

वित्ते - தநமானது

क्षीणे - குறைவடைந்தபிறகு

परिवारः - வேலைக்கார ஜனமானது

कः - எது

तत्वे - உண்மையான பரம்பொருளானது

ज्ञाते - அறியப்பட்டதாளுல்

संसारः - பவபந்தமானது

कः - எது ?

தன் யௌவனப் பருவத்தில் அக்ஞானத்தின் வலிமையால் ஞானம் குன்றி ஸ்திரீவிஷயமான போகத்தில் அதிக அவாகொண்டு அதையே பெரிய புருஷார்த்தமாகக் கருதி இம்மானிடப் பிறவிக்குற்ற பயனை யாதொன்றையும் அடையாமல் மிருகங்களைப்போல் இருப்பவனுக்கு விஷய சுகத்தின் யோக்கியதையைஅறிவித்து அவன்கருதியிருப்பது தவறென்று போதிக்கிளுர்.

ஒரு மனிதனுக்கு விஷயசுகத்தையனுபவிக்கவேண்டுமாளுல் சரீரம் முக்கியம். அதுமாத்திரம்போதாது. யௌவன ஸமயமாயுமிருக்கவேண்டும். சரீரமிருந்தும் 100–வயதானபிறகு சக்திகுன்றி தன் காரியத்தைக்கூடச் செய்துகொள்ளமுடியாமல் பிறரை அபேக்ஷிக்கும் காலத்தில் விஷயசுகத்தில் விருப்பம் ஏற்படுமா ? ஒரு குளத்திலுள்ள ஜலம் பூராவும் காய்ந்துபோனபிறகு அதற்குக்குளம் என்ற பெயரும், ஒருவனுடைய செல்வம் பூராவும் நஷ்டமான பிறகு அந்தப் பிரபுவுக்கு வேலைக்காரனும், ஆசார்யாளின் அனுக்கிரஹத்தால் அக்ஞானம் விலகி ஞானமேற்பட்டு ஆத்மஸ்வரூபஸாக்ஷாத்காரத்தைப் பெற்றவனுக்கு ஸம்ஸாரபந்தமும் எப்படி ஏற்படாதோ அவ்விதமே அதிக வயதுசென்றபிறகு ஸ்திரீவிஷயமான போகத்தில் இச்சையே ஏற்படாது. ஆகையால் எப்பொழுதும் சிரஞ்சீவியாய் யௌவனத்துடன் விஷயசுகத்தை அனுபவிக்கலாமென்று கருதி ஜன்மாவை வீண்பண்ணுமல் நல்ல காரியங்களில் முயற்சிக்கவேண்டியது முக்கியம்.

# விதவா விவாஹமும் காந்தியும்,

(461-பக்கத் தொடர்ச்சி)

6. விதவைகளுக்குச் செய்யப்படும் விவாகம் புனர்விவாகமென்றுகூடச் சொல்வதற்கில்லை. முதல் விவாகமென்றுதான் சொல்லவேண்டும். அவர்கள் இதற்கு முன் செய்துகொண்டது உண்மையில் விவாகமல்லஎன்றும் கூறி முடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தவாக்கியத்தைக் கேட்கும் எவர்களுக்குத் தான் ஆச்சரியம் உண்டாகாது. ஜகத்திலுள்ள ஜனங்கள் பூராவும் அறிவில்லாதவர்கள்; நாம் எதைச்சொன்னாலும் அங்கீகரிப்பார்கள் என்று தமக்குத் தோன்றியதை எல்லாம் தர்மோபதேமாகக்கருதி லோக க்ஷேமார்த்தமாய் உபதேசிக்கத் தைர்யமாய் முன்வருகிறாரென்று நன்கு வெளியாகிறது. அவ்விதமில்லாவிடில் விதவைகளுக்கு முன்செய்த விவாகம் உண்மையில் விவாகமல்லவென்று மானிடப் பிறவியைப் பெற்றவர்களுக்குள் எவராகிலும் கூறத்துணிவாரா? முதலில் செய்த விவாகமானது, அந்தப்பதியைக் கொல்வதற்காகச் செய்த ஆபிசாரப் பிரயோகமா? அல்லது விளையாட்டா? முந்திச் செய்த விவாகத்தால் மாத்திரம் பதியுடன் ஸௌக்கியமாயிருக்கும் ஸ்திரீகள் யாவரும் விவாகமாகாதவர்களென்றே இவர் அபிப்பிராயப்படி சொல்லவேண்டும். இந்த வார்த்தை எவ்வளவு அழகாயிருக்கின்றது! பதியிருந்தால் விவாகமானவர்கள் தான். முதல் பதியின் காலம் சென்றுவிட்டபடியால் அந்த விவாகமும் ரத்தாய்விட்டதென்று கூறுகிறோமென்றால் எந்தப் பிரமாணத்தைக் கொண்டு இவ்விதம் கூறுகிறது? நீங்கள் எந்தப் பிரமாணத்தைக்கொண்டு சொல்லுகிறீர்களென்றால், சாஸ்திரப் பிரமாணங்களைக்கொண்டு சொல்லுகிறோம். இவர் கொள்கைக்கு இவர்கள் வாக்கைத் தவிர வேறு பிரமாணம் கிடைக்கமாட்டாது. எத்தனை

விவாகம் செய்தாலும் பதி இறந்து விட்டால் அந்த ஸ்திரீ கன்னிகையாகி விடுகிருள் என்ருல் இரண்டாவது பதி இறந்து போனாலும் மறுபடியும் அவள் கன்னிகையில்லை என்று எப்படிக் கூற முடியும்? பர்த்தாமரித்தால் எப்பொழுதும் கன்னிகைதான், விவாகத்திற்கு யோக்யமுள்ளவள் தான். ஸ்திரீகளுக்கு எவ்வளவு வயது சென்ருலும் பதியின் காலமானுல் அவர்களாக இஷ்டமில்லைஎன்று விவாகம் செய்துகொள்ளாமலிருந்தாலொழிய அவர்களை விவாகத்திற்கு அர்கமில்லாதவர்கள் என்றுசொல்வதற்கில்லை. நம் தேச க்ஷேமத்தை யுத்தேசித்து இம்மாதிரி தர்மஸ்தாபனம் செய்ய ஒரு மஹானும் இதுவரையில் அவதரித்ததாகத் தெரியவில்லை. இனியும் அவதரிக்கமாட்டார்களென்றே நிச்சயமாய்ச் சொல்லலாம். இவர்கள் செய்யும் முயற்சியைக் கவனித்தால் நம் மதத்தையும் அதற்கு அடிப்படையாய் பெரியோர்களால் வெகு நாளாக மிகவும் பாடுபட்டுப் பாதுகார்க்கப்பட்டுவந்த வர்ணுச்ரம தர்மத்தையும் கூடிய சிக்கிரம் அடியோடு போக்கவேண்டியதற்குக் கங்கணம் பூண்டிருப்பதாகத் தெரிகின்றது. மேலும் ஸ்திரீகளுக்கு விதவாவிவாகமென்கிற பெரிய தோஷத்தை ஏற்படுத்தி அவர்களைத் தோஷமுள்ளவர்களாகச் செய்து வர்ணஸாங்கர்யத்தையும் உண்டுபண்ணி எல்லா ஜனங்களையும் கொடிய நரகத்திற்கு ஆளாகும்படிச் செய்யத்தான் இந்தக் காரியத்தில் எத்தனம் செய்கிருர்கள் என்பது திண்ணம். இக்கருத்தையே கீதா சாஸ்திரத்தில்,

धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ।
अधर्माभिभवात् कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ॥
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसंकरः ।
संकरो नरकायैव कुलघ्नानां कुलस्य च ॥
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ।
दोषैरेतैः कुलघ्नानां वर्णसंकरकारकैः ॥
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ।

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ॥
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥

தர்மம் நடைபெருமல் போனுல் குலத்தைப் பூராவும் அதர்மம் வியாபித்துக் கொண்டு அதிக அவமானத்தை யுண்டுபண்ணுகிறது. அதர்மத்திற்கு வியாபகமேற்பட்டால் உடனேகுலஸ்திரீகள் கெட்ட கார்யங்களில் பிரவிர்த்தித்து மிகவும் தோஷமுள்ளவர்களாகிருர்கள். ஸ்திரீகள் துஷ்டர்களானுல் வர்ணசாங்கர்யமும் ஏற்பட்டுவிடும். அந்த வர்ணஸாங்கர்யம் நாகத்தையும் பொருட்டு ஆகின்றது. இவர்களுடைய பிதுருக்கள், பிண்டம் ஒன்றுமில்லாமல் நாகத்தில் விழுகிருர்கள். குலங்களை அடியோடு நாசம் செய்கின்றனவும் வர்ணஸாங்கர்யத்தை உண்டுபண்ணுகின்றனவுமான இந்த தோஷங்களால் வெகுகாலமாய் நிலைபெற்றிருந்த குலதர்மம், ஜாதிதர்மம், இவையாவும் அடியோடு நாசத்தையடைகின்றன. ஸ்வதர்மத்தை இழந்த ஜனங்களும் எப்பொழுதும் நாகத்திலேயே வஸிக்கிருர்கள் என்று ஸ்ரீ பகவான் வாய்விட்டுக் கதருகின்ருர். இவ்விதம் கதரும் சாஸ்திரங்களைச் சற்றும் கவனியாமல் லோகத்திற்கு க்ஷேமார்த்தமான கார்யத்தைச் செய்கிருேமென்று வெளிவேடம் பூண்டு, கலியால் விரட்டப்பட்டதுபோக ஆங்காங்கு நடைபெறும் பாக்கியுள்ள ஸநாதனதர்மங்களையும் அறவே ஒழித்து ஸகலஜனங்களையும் நாகத்திற்கு அனுப்புவதைக் காட்டிலும் கொடூரமான பாபச்செயல் வேறு என்ன இருக்கிறது? இனியாகிலும் காந்தியவர்கள் சாஸ்திரசம்மந்தமான வர்ணுச்ரம தர்மங்களைச் சீர்திருத்த முன்வந்து பலர் நிந்தைக்காளாகாமல் லௌகிக விஷயங்களை மாத்திரம் கவனித்தால் அவர்களுடைய வாக்குக்கு கௌரவமும், லோக க்ஷேமமும் ஒரு ஸமயம் ஏற்பட்டாலும் ஏற்படாலாமாகையால் அந்த விஷயத்தோடு அவர்கள் இருப்பது நலமென்று எனக்குத் தோன்றியதையறிவித்து இவ்விஷயத்தையும் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

உபபத்திராதிபர்.

---

# மதத்திலும் சீர்திருத்தமாம்.

(467-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

தன்னடக்க மென்றால் தன்னையடக்கி மனதையடக்கிப் பொறுத்து அனுதினகாலமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் கும் பிரபஞ்சத்தில் உண்மையான மதஸ்தாபகர்களின் கட்டளையைப்பின்பற்றி நடந்துகொண்டு நான்என்ற அகங்காரத்தை வேறக் களைந்து சாந்தமாய் இருப்பதுதான் தன்னடக்கமென்றாகு மென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார். இதைவிட்டு தன்னடக்க மென்பதற்கு காந்திகொண்ட பொருள் இன்னதென்று அடுத்தாற் போல்அவரே விளக்குகிறார். அதாவதுருதுவாவதற்குமுன்பேஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்துவிடாவிட்டால் பாவம் ஸம்பவிக்குமென்று நினைப்பவர் தன்னடக்கம் என்பதையே அறியாதவர்களாய் இருக்கவேண்டும் என்றார். ஆகவே தன்னடக்கம் என்ற பதத்திற்கு ருதுவான ஸ்திரீயை விவாகம் செய்துகொள்கிறவனென்று பொருளாம். இந்த அத்புதமான அர்த்தத்தை காந்திக்கு அவர் மனது தான் உபதேசித்திருக்கவேண்டும். வேறு யாருக்கும் இவ்விதம் முக்காலங்களிலும் தோன்றாது. இருக்கட்டும். இவர் விவாகமென்றால் என்ன அர்த்தம் கொண்டிருக்கிறார். ஸ்திரீ புருஷர்கள் புணர்வது தான் விவாகமென்று கொண்டுத் தவிக்கிறார். விவாகமென்றால் பிராமணப் பையனுக்கு 7-வது வயதில் உபநயனம் செய்வது போல் ஸ்திரீகளுக்கு அந்த வயதில் செய்யும் ஸம்ஸ்காரமே தவிரப் புணர்ச்சியல்லவென்று அவருக்கு யாராவது ஒரு ஆப்தர்ஏகாந்தத்திற் கூறிவிட்டால் இவ்வளவு மயங்கமாட்டாரென்று நினைக்கிறேன். உண்மையைக் கொஞ்சம்கூட அறியாமல் நம் மகரிஷிகள் ருதுவாவதற்குமுன் விவாகத்தைக் கூறிவிட்டதால் தன்னடக்கமற்றவர்களென்றும் மிருகஇச்சையில் ஆசையுள்வர்களென்றும் வெளிப்படையாய்த் திட்டுகிறார்.இவ்விதம்மதாசார்யர்களைநிந்திப்பதுஇவருக்குக்கொஞ்சமேனும் அடுக்காது. ஏதோ லௌகிகமாய்ச்சில சகாயம் செய்வதை முன்னிட்டுச் சிலரால் கொண்டாடப்படும் இவர்தான் இப்போது தன்னடக்கமில்லாது வேதசாஸ்திர நிந்தையிற்புகுந்திருக்

கிறார்பாருங்கள். தன்னை மகாத்மாவென்று எண்ணிக்கொண்டு வேதவிரோதமாய் இவர் இடும் உத்தரவு இது.

ருதுவாகிச் சிலவருடங்கள் ஆவதற்கு முன்பே கலியாணம் செய்துவிடுவதுதான் பாபகாரியமென எண்ணவேண்டும்என்று

இவ்விதமெல்லாம் உலகத்தைச் சீர்திருத்த வந்தவராய் எண்ணிக்கொண்டு மதத்தையும் சீர்திருத்துகிறேனென்று லைஸென்ஸ் பெற்றுக் கொண்டு மதம் என்பதை இன்னதென்றே அறியாமல் ஏழைகளையும் மதவாஸனையற்ற மற்றவர்களையும் மயங்கும்படி பேசுவது காந்திக்குச் சற்றும் அழகல்ல. இதற்கு முன் சீர்திருத்தக் கிளம்பிய கோகேல், திலகர் முதலியவர்கள் இவ்விதம் மத விஷயத்தில் தலையிட்டுக்கொண்டு தாறுமாறாய்க் கூறவே இல்லை உலக விஷயத்திற்கேற்ற ராஜீய வ்யவகாரங்களை மட்டிலும் நன்கறிந்து அதில் நமக்குப் பாதகமாய் உள்ளவைகளை எடுத்துக் கூறி அதைச் சீர்திருத்த முன்வந்தால் யாவரும் ஸகாயமாய் நிற்பார். அதைவிட்டு இவ்விதமெல்லாம் பேசினால் இதற்குப் பரிகாரம் தேடவும் இவ்விதம் பேசுவதைக் கண்டிப்பதற்கும் மகாத்மாக்கள் பலர் கிளம்புவார்கள் என்பதை நிச்சயமாய் நம்பலாம். கடைசியிலும் ஒரு வார்த்தை சொல்லுகிறேன். பால்யவிவாகத்தை நிறுத்தினால் சென்னையில் இந்த மாதிரி அபாயம் நேரிட்டிராது. என்று சொல்கிறார். பால்ய விவாகத்தை சாஸ்திரப்படி நடத்தி வந்தால் உலகத்திற்கே இப்போது ஏற்பட்டிருக்கும் அனர்த்தங்களே நேர்ந்திருக்கமாட்டாதென்பது திண்ணம். சுபம்.

எம், என். சுப்பிரமணியசாஸ்திரீ.

---

உ

கடவுள் துணை.

# மாணிக்கவாசகர்.

---

இவர் சைவசமயாசாரியர் நால்வருள் ஒருவர்; பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரிலே அமாத்யப் பிராமணகுலத்தில் பிறந்தவர். இவரது பிள்ளைத்திருநாமம் திருவாதவூரர் என்பது.

இவர் உரியகாலங்களில் வேதவிதிப்படி கர்ணவேதனம் முதலிய செய்விக்கப்பெற்றார்; நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்க வளருவாராயினர்; பதினாறு வயதிற்குள் வேதம் முதலிய எல்லாக்கலைகளையும் கற்று வல்லவராயினர்.

இக்காலத்தில் பாண்டிநாட்டை அரிமர்த்தன பாண்டியன் ஆண்டுவந்தான். அவன் திருவாதவூருடைய கல்வித்திறமை முதலியவற்றைப் பலர் சொல்லக்கேட்டான்; அவரை வரவழைத்தான்; மனம் மகிழுமாறு பல வரிசைகளை அளித்தான்; மந்திரி உத்தியோகத்தில் அமர்த்தினன். இவர் படைக்கலப் பயிற்சி நீதி நூல் முதலியவற்றில் பெரிதும் தேர்ந்தவராயிருந்தமையின், விரைவில் அனைவரிலும் மேம்பட்டு முதன் மந்திரியாகவும் ஆயினர்; கண்ணும் கவசமும் போல அரசனுக்கு உற்ற காரியங்களைச் செய்பவரும் ஆயினர். இவற்றால் குடிகள் இவரைப்பெரிதும் கொண்டாடுவார்கள்.

இங்ஙனமாக, 'இதுமெய்ப்பொருள்; இது பொய்ப்பொருள்' என்று உள்ளவாறே உணரும் பகுத்தறிவு இவரது மனத்தே தோன்றியது. தோன்றவே நிலையில்லாத இம்மை மறுமை இன்பங்களில் உவர்ப்பு உண்டாக மனம் மாறுபட்டது. படவே, இவர் மோட்சத்தை அடையும் வழியையே ஆராய்வாராயினர்; அன்பின் வழி ஒழுகி அரனார் திருவருளைப்பெற்ற அடியார்களால் அன்றி ஏனையோர்களால் முக்தியினை எய்துதல் முடியாததாகும். அதனை அடையுமாறு காட்டவல்லதுநல்லாசிரியரது திருவருளே. ஆதலின், உண்மை அன்பினுக்கு எளிவந்து உய்வழி காட்டும் ஞானாசிரியரைத் தேடி அடைபவேண்டியதே செய்யத்தக்கது' என்றும் எண்ணுவாராயினர். பெரியார்களைப் பார்த்துப் பேசுமாறு நேர்ந்த போதெல்லாம் அவர்களோடு அளவளாவி மெய்ப்பொருள் ஆராய்ச்சியினையே செய்வார். எனினும், இவரது மனம் விரும்பியதைப்பெறாமையின் அமைதியை அடையவில்லை.

இப்படியாக ஒரு நாள் திருவாதவூரர் முதலாயினார் அரசனுடன சபையிலே இருக்க, அரசனுடைய குதிரைப் பந்தியின் காவலர்கள் வந்து வணங்குகிறார்கள்; "அரசே, நம்முடைய குதிரைகளில் இறந்தனபோக எஞ்சியிருப்பன நோய்வாய்ப்பட்டும், மூப்புற்றும் தகுதியற்ற நிலைமையில் இருக்கின்றன. நல்ல குதி

ணயாக ஒன்றும் இல்லை" என்று கூறினார்கள். கூற்றலும், அரசன் திருவாதவூரரை நோக்கி "மந்திரித் தலைவரே, நீர் நமது பொக்கிஷத்தைத் திறந்து வேண்டிய பொருளை எடுத்துக்கொள்ளும்; சமுத்திரக்கரையில் வந்து இறங்கும் குதிரைகளை விலைக்கு வாங்கிக்கொண்டுவாரும்" என்று மொழிந்தனன. மொழியக் கேட்ட திருவாதவூரர் இஃது எனது மனம் விரும்பியதை அடைவிக்கும் வழியாகும போலும் என்று எண்ணினர்; பொக்கிஷத்தைத திறந்து இஷ்டப்படிவேண்டும் பொருளை எடுத்துக்கொண்டார்; அரசனிடம் உத்தரவு பெற்றார்; பொருள்களை ஒட்டகங்களில் ஏற்றுவித்து முன்னே அனுப்பிவிட்டு ஆவலாய்ச் சோமசுந்தரரைத் தரிசனம் செய்ய ஆலயத்துக்குச் சென்றார்; சந்நிதியிலே "எம்பெருமானே, இப்பொருள்கள் எல்லாவற்றையும் தேவரீருக்கும் தேவரீருடைய அடியார்களுக்கும் உரியனவாகச் செய்தல் வேண்டும், இஃதொன்றே அடியேனது வேண்டுகோள்" என வேண்டிநின்றார், விபூதி அளிக்கப்பெற்றார்; சிவிகைஏறிச்சென்றார்.

இவ்வாறு, அரசனுக்குக் குதிரைவாங்கச் செல்பவர்போல ஆசிரியரை நாடிச்செல்லும் திருவாதவூரரை வலியவந்து ஆட்கொள்ள ஆவலாய்ச் சோமசுந்தரர் திருவுளங் கொண்டார்; அந்தணர் வடிவந்தாங்கி ஆசாரியரானர், பல மாணுக்கர்களுடன் திருப்பெருந்துறைக்குவந்தார்; ஒரு குருந்தமரத்தின் நிழலில் வீற்றிருந்தருளினர். 'பிறவியாகிய கடலை எங்ஙனம் கடப்போம்' என்ற ஒரே கவலையுடன் பயணமான திருவாதவூரர் சேனைகளுடனே காடுகளைக் கடந்தார்; பெருங்கருணைத் தடங்கடலாகிய கடவுள் ஞானசாரியராக வீற்றிருக்கும் திருப்பெருந்துறையை அணுகினர்; அத்திருப்பதியை அணுக அணுகத் தமது நிலை மாறுபட்டுவருவதை உணர்ந்தார்; 'இங்கே எனக்கு ஞானசாரியரது தரிசனம கிடைக்கும்போலும்,' என எண்ணினர்; ஆலயத்தை அடைந்தார்; விதிப்படி வணங்கினர்; குருந்த மரததடியிலே ஆசாரியர் உருவத்தோடு எழுந்தருளியிருக்கும் ஆண்டவனைக் கண்டார்; 'சனகாதி நால்வருக்கும் அன்று கல்லால மாநிழலிலே காட்டியருளியதிருக்கோலம்போலும் இன்றைக்கு அடியேற்குக் காட்டிய இத்திருக்கோலம், என்று ஆண்டவன் அருளால அறிந்தார்; மனமுருகினர்; வணங்கினர்; ஆண்டவனது திருவருளாகிய வலையில் அகப்பட்டுக் கொண்டார்.

அப்பால், ஆசாரிய வடிவங்கொண்ட அண்ணலார் திருவாத வூருடைய ஒழுக்கத்தையும், அன்பையும் கண்டார்; அவரைக் கண்களாலே பார்த்தார்; கரத்தாலே தடவினர்; திருவடியைச் சிரசின்மேல் வைத்தார்; உபதேசத்திற்குத் தகுந்தவராகச்செய்தார்; சூட்சும பஞ்சாட்சரத்தை உபதேசம்பண்ணினர்; தம்முருவாக்கினர். ஆக்கலும் திருவாதவூரார் தம்மைமறந்தார்; அறிவுருவானர். உடனே அவரது நாவில் ஞானக்கலைமகள் வந்து தங்கினள், தங்குதலும், அன்புருவினராய்த் தம் வசமழிந்து தமது பரமாசாரியரை வணங்கித் துதிபாடலாயினர். அவற்றைக்கேட்ட ஞானசாரியாரான பரமசிவனர் திருவாதவூரருக்கு "மாணிக்கவாசகர்" என்னும் பெயரைக் கொடுத்தருளினர். "நீ இங்கே இருந்து செய்யவேண்டியன சில உள, ஆதலிற் சிறிதுகாலம் இங்கேயே இருப்பாய்" என்று கூறித் தம்முடைய சீடர்களுடன் மறைந்தார். மறைதலும், மாணிக்கவாசகர் "ஆண்டவரே, நாய்க்கு தவிசிட்டதுபோல நாயினேனுக்கும் உமது அருமைத் திருமேனியைக் காட்டினீரே; என்னையும், எனது வினையையும் இங்கே இருத்தித் தேவரீர் உம்முடைய அடியார்களோடு மறைந்தீரே; தேவரீரைப் பிரிந்து அடியேன் எங்ஙனம் ஆறி இருப்பேன்; ஆற்றேன்; ஆற்றேன்" என்று இரங்கினர்; புரண்டு அழுது பலம்புவாராயினர்; பின்னர் ஒருவகையாகத் தேறுதலுற்றார்; கோயிலுக்கு வெளியே வந்தார்; தமது வரவை எதிர்நோக்கிநிற்கும் சேனைத் தலைவர்களைக் கண்டார்; "நீங்கள் முன்னேபோய்க் 'குதிரைக் கூட்டங்கள் ஆடி மாதத்தில் வரும்' என்று பாண்டிய மன்னர்க்குச் சொல்லுங்கள்" என அவர்களை அனுப்பினர். அவர்களும் அங்ஙனமே சென்று அரசனுக்கு நிகழ்ந்தவற்றைக் கூறினர்கள். அரசனும் ஒன்றும் கூருது குதிரைகளின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

அங்கே அரசன் அவ்வாறிருக்க, இங்கே மாணிக்கவாசகர் தாம் குதிரைகள் வாங்கும்பொருட்டுக் கொண்டுவந்த பொருள்கள் எல்லாவற்றையும் ஆண்டவன்பொருட்டும் அடியார்கள்பொருட்டும் செலவுசெய்தார்; அங்கேயே தங்கியிருந்தார். இந்நிலையில், அரசன்

"தாம் சொல்லியனுப்பியபடி ஆடிமாதம் ஆகியும் இன்னும் குதிரைகள் வந்திலவே; இஃதென்ன காரியம்?" என்று மாணிக்கவாசகருக்கு எழுதியனுப்பினான். அதனைப்பெற்றுப் படித்து உணர்ந்த வாசகர் 'இனிச் செய்வது யாது?' என்று ஆராய்வாராயினர். ஆலயத்துக்குட் சென்றனர்; கடவுளைப் பலவாறாகப் புகழ்ந்தனர்; "ஆண்டவனே, தேவரீரது திருவருளின்படி அரசன் அசுவங்களை வாங்கிவரும்படி அளித்த பொருள்களை ஆலயத்துக்கும் அடியார்களுக்குமாகச் செலவுசெய்துவிட்டேன்; அரசனது கட்டளையும் நிறைவேறவில்லை. நான் சொல்லியனுப்பியபடியும் நடக்கவில்லை; எங்ஙனம அரசனுக்குக் குதிரைகளை வாங்கிக்கொண்டுபோவேன்" என்று விண்ணப்பஞ்செய்து வணங்கினார். உற்றவழியினைச் செய்தருளுமாறு இரந்தார். அக்கால், அவர்கேட்க ஆண்டவன் அசரீரிவாககால் "மாணிக்கவாசக, 'குதிரைகள் வரும' என்று அரசனுக்குச் செய்தியை அனுப்புவாயாக" என்று அருளிச்செய்தனர். மாணிக்கவாசகரும் மிக மகிழ்வுற்று அங்ஙனமே செய்தனர்; அரசனும் கேட்டுச் சந்தோஷங்கொண்டனன்.

இவ்வாறாக, கடவுள் அன்றிரவு மணிவாசகரது கனவிலே குருந்தமரநிழலிலே தோன்றி ஞானோபதேசம்பண்ணிய கோலத்தோடு தோன்றினார்; "பாண்டியனது மனத்தைக் கவரத்தக்க குதிரைகளைக் கொண்டுவருவோம்; நீ முன்னே செல்வாயாக" என்று கூறி மறைந்தார். மாணிக்கவாசகரும் நித்திரைவிட்டெழுந்து கடவுளை நினைத்துக்கொண்டிருந்தார்; உதயமானதும் நித்தியகருமாக்களை முடித்து ஆண்டவனை விதிப்படி வணங்கி மதுரையை அடைந்தார்; பாண்டியனது சபைக்குச் சென்றார்; முறைப்படி அரசனைவழிபட்டார். பாண்டியனும் அவரைப் பார்த்து "நீவிர் கொண்டுபோன பொருள் எவ்வளவு? வாங்கிவந்த குதிரைகள் எவ்வளவன?" என்று வினவினான். வாசகரும், "அரசே, நான் கொண்டுபோன பொருளுக்கும் அளவில்லை; வாங்கிவந்த குதிரைகளுக்கும் அளவில்லை; அக்குதிரைகள் பின்னே வருகின்றன. தாங்கள் காண்பீர்களாக. இனித்தாங்கள் 'துரங்கபதி' என்ற சிறப்புப்பெயர்களையும் பெறுவீர்கள்" என்றனர். பாண்டியன் பல

வரிசைகளையும் வழங்கி வாசகரை மாளிகைக்கு அனுப்பினன். வாசகர் விதிப்படி மீனுக்ஷி சுந்தரேசரை வணங்கித் ''தேவரீர் அளித்த வாக்குப்படிக்குதிரைகள்வருதல்வேண்டும்'' என்றுவேண்டினர். ''அன்ப, அஞ்சேல்; நீ விரும்பியபடியே குதிரைகளைக் கொண்டுவருவோம்'' என அசரீரி எழுந்தது. வாசகரும் மன மகிழ்வுடன் தமது மாளிகைக்குச் சென்றார். தமது செயலைக் கண்டித்துக் கடிந்து கூறிய சுற்றத்தார்களது வார்த்தைகளைப் பொருட்படுத்தாது ஆண்டவனது திருவருள் ஒன்றையே நினைத்துக்கொண்டிருந்தார்.

மறுநாள் பாண்டியன் மாணிக்கவாசகரை அழைத்தான்; ''இன்னும் குதிரைகள் வரவில்லையே'' என்றான். என்றலும் அவர் ''அரசே, குதிரை இன்றுமுதல் மூன்று நாட்களுள் வந்துவிடும்; அவற்றிற்கு வேண்டிய குதிரைப்பந்தி முதலியவற்றை அமைத்தருள்வீராக'' என்றனர். அரசனுடைய ஏவலாளர்களும் அவ்வண்ணமே செய்தார்கள். மணிவாசகர் குறித்த மூன்று நாட்களும் கடந்தன. பாண்டியன் மனம் மாறுபட்டு வாசகரை அழைப்பித்தான்; சீற்றங்கொண்டு தண்டிக்குமாறு கட்டளையிட்டான். தண்டலாளர்கள் ''இனிப்பொருளுக்கு வகையாது? சொல்லும்'' என்று அவர்மேலே கல்லை ஏற்றினர்கள். பரமசிவனர் திருவருளால் அந்தக்கல்லின்பாரம் அவரை வருத்தவில்லை. ஆண்டவனையே வழுத்துவாராயினர். அப்பால் தண்டலாளர்கள் கைகளிலும் கால்களிலும் கிட்டிகளை மாட்டி நெரித்தார்கள். அவையும் அப்பெருந்தகையாரை அச்சுறுத்தவில்லை. அந்நிலையில் சூரியன் அஸ்தமயமானன். தண்டலாளர்கள் அன்பரைச் சிறையிலிட்டு வருத்தினர்கள். ஆண்டவனது திருவடி நினைப்பையே துணையாகக் கொண்டு அந்த இரவைத் தாண்டினர். சூரியன் உதயமானன். வாதவூரர் சொக்கேசரது ஆலயத்தின் திசையை நோக்கிப்பலவாறு துதிசெய்வாராயினர்.

இங்கே மணிவாசகர் இரங்க, அங்கே ஆலவாய்க் கடவுள் ''ஆவணிமாதத்து மூலநக்ஷத்திரம் வந்துவிட்டது; இன்னும் பாண்டியன் கோபங்கொள்ளாமுன் நாம் குதிரைகளைக் கொண்டு

பேரய்க் கொடுத்தல்வேண்டும். காடுகளிலிருக்கும் நரிகளைக் குதிரைகளாகச் செய்யுங்கள். நீங்கள் குதிரைச் சேவகர்களாக வேடம் பூண்டு அவைகளின்மீது ஏறிக்கொண்டு முன்னே செல்லுங்கள். நாமும் அவ்வாறே வருகின்றோம்'' என்று நந்தியெம்பெருமாள் முதலிய கணநாதர்களிடம் கூறியருளினார். அங்ஙனமே அவர்களும் சென்றார்கள். சோமசுந்தரரும் சென்றார். குதிரைகள் தூரத்தில் வருவதை உணர்ந்த நகரமாந்தர்கள் மணிவாசகருக்குத் தெரிவித்தார்கள். அரசனும் தெரிந்துகொண்டான்; திருவாதவூரடிகளைப் பலவகையாகச் சிறப்பித்தான்; அமைச்சர் முதலாயினார் படைசூழக் கோபுரவாயிலை அடைந்தான்; குதிரைகளின் வரவை எதிர்நோக்கி அங்குள்ள ஒரு மாடத்திலே சிங்காதனத்திலே வீற்றிருந்தான்.

இந்நிலையில், ஆண்டவன் குதிரைகளைப் பாண்டியனுடைய கண்களுக்குப் புலப்படாவண்ணம் வைக்க, அரசன் கோபங் கொள்ளலானான். மீட்டும் வாதவூரடிகள்வழுத்துகின்றார். உடனே குதிரைகளின் வரவு அறியப்படுகிறது. அரசனும் மகிழ்வுற்றிருக்கின்றான். குதிரைகள் அருகில்வந்தன. தன்னுடைய முன்னோர்களும் கண்டறியாத அழகினையும், வேகத்தினையுமுடைய குதிரைகளைப் பார்த்துப் பாண்டியன் பெருமகிழ்வுற்றான். மணிவாசகரைப் பெருதும் கொண்டாடினான். குதிரைகளுடன் வந்த சேவகர்களைப் பார்த்து மகிழ்ந்தான். வாதவூரரைநோக்கி ''இவருள் தலைவர் யாவர்?'' என்று வினவினான். அக்கால், வேதப்பரியில் ஏறிவந்த வித்தகராகிய சுந்தர அரசன் முன்னே தோன்றி ''எங்களது குதிரையேற்றத்தின் சிறப்பைக் காண்பாயாக'' என்று கூறி ஐங்கதிகளையும், பதினெட்டுவகைச் சாரிகளையும் பலவித வேறுபாடுகள்தோன்றக் காட்டினார். அவரே 'தலைவர்' என்பதை அரசன் அறிதலும் அவனை அறியாமலேயே அவனுடைய கைகள் சிரத்தின்மேல் குவிந்தன. சிறிது வெட்கங்கொண்டு மாற்றினான்.

(தொடரும்)

## தேவிபஞ்சநாம விவரணம்.

சுவர்ணாங்கி, சுகஹஸ்தை, சூதலிங்க வல்லபை, காமாக்ஷி தேவி, தர்மதேவி, இவ்வைந்துநாமங்களும் சுவர்ணகாமாக்ஷிதேவி யினுடைய நாமங்களாகும்.

தபஸ்வினி, கனச்யாமா, (நல்ல பச்சைநிறமுள்ளவள்) சர்வ சைவாலயேச்வரி, காமாக்ஷி, காளி, இவ்வைந்துநாமங்களும்தபஸ் காமாக்ஷி தேவியினுடைய நாமங்களாகும்.

திரிபுரை, ராஜராஜேச்வரி, மஹாகாமேசவல்லபை, காமாக்ஷி காமகோடி இவ்வைந்து நாமங்களும் திரிபுராம்பிகையாகிய பரா சக்தியினுடைய நாமங்களாகும்.

இதனுல் பராசக்தியானவள் மூன்றுவிதமான கோலத்துடன் ஸ்ரீ காமகோடி பீடமாகிய ஆலயத்தில் வீற்றிருக்கின்றுள் என்ற றிதல் வேண்டும்.

இனி அந்தப் பராசக்தியாகிய திரிபுராம்பிகையினுடைய ஆத்மநாதராகிய ஜோதி ஸ்வரூபரான சூதலிங்கநாதருக்கும் அவர் அம்சமாகிய தழுவக்குழைந்த பெருமானுருக்கும் காரணப்பெயர் களாகவுள்ள நாமவிவரணம் வருமாறு:—

## சிவபேத பஞ்சநாம விவரணம்.

சூதஜ்யோதி, நிர்க்குணுத்மா, சிவனுர், காமேச்வரர், ஏகாம் பரநாதர் இவ்வைந்து நாமங்களும் சூதலிங்கப்பெருமானுருடைய நாமங்களாகும்.

இரசாலலிங்கம், உருத்திரகோடி, சதாசிவனுர், சகுணர், ஏகாம்பரநாதர் இவ்வைந்து நாமங்களும் தழுவக்குழைந்த பெரு மானுருடைய காரணப் பெயர்களாகும்.

இனித்தேவியினுடைய அர்த்தாம்சமாகிய வரதராஜருடைய காரணப் பெயர்கள் வருமாறு:—

## விஷ்ணுபஞ்சநாம விவரணம்.

யக்ஞோத்பவர், புண்ணியகோடி, கஜேந்திரவாதர், தேவ ராஜர், அபீஷ்டவாதர் என்பனவாம்.

காஞ்சிக்ஷேத்திரத்தில் பராசக்தியானவள் சக்திசம்பந்தத்தால் மூன்றுவிதமான சக்தியாகவும் சிவசம்பந்தத்தால் இரண்டுவித சிவலிங்க ஸ்வரூபமாகவும் விஷ்ணு சம்பந்தத்தால் § ஒருவிதமான விஷ்ணுஸ்வரூபமாகவும் ஆக ஆறுவிதமாகத் தன்னுடைய லீலா விநோதத்தால் வீற்றிருக்கின்றனள்.

### இனிச்சிவசக்தி ஐக்கிய பூஜாவிதியின் வரலாறு.

லலிதா தேவியானவள் சிவசக்தி ஐக்கிய ரூபிணியாதலால் அந்தத்தேவியை நிர்க்குணபரமான சிவபாவனையாகவும் சகுணபரமான சக்திபாவனையாகவும் தியானித்து சிவசக்தியாத்மகமாக அர்ச்சித்தல் வேண்டும். இவ்வண்ணம் பூஜிப்பதே மேலான சாஸ்திரங்களுடைய சம்மதமும், அந்த லலிதாம்பிகைக்கு எப்பொழுதும் பிரியமாயுள்ளதுமாகும். இவ்வுண்மையறிந்து பூஜிப்பவர் மங்களத்தைப் பெறுவர். இவ்வுண்மையையறியாது சிவசக்திகளைப் பேதபாவனை பண்ணி அந்த லலிதாம்பிகையினிடத்தில் சிவஐக்கிய பாவனையை யொழித்து சக்திபாவனைமாத்திரம் கொண்டு பூஜிப்பவர் அமங்கலத்தைப் பெறுவர்.

தவக்கோலமுடைய ஸ்ரீ காமாக்ஷிதேவியும் சிவசக்தி ஐக்கிய பாவமாயிருக்கின்ற லலிதாதேவியுமாகிய திரிபுராம்பிகையினுடைய சகுண ஸ்வரூபமாகலான் அத்தேவியைச் சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபமாகவே பூஜித்தல் வேண்டும். அவ்வண்ணம் பூஜிப்பதே அந்தத் தேவிக்கும் பிரியம். அதனையறிந்து அவ்வம்பிகையை அவ்வண்ணமாகத்தியானித்துப் பூஜிப்பவர் தாங்கள் வேண்டும் இஷ்டசித்திகளைப் பெறுவர்.

இதனால் லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையையும், அவளிடத்தில் தோன்றிய தபஸ்காமாக்ஷியையும் சிவசக்தி ஐக்கியபாவனையாகவே தியானித்துப் பூஜித்தல் வேண்டும். என்றும் அங்ஙனம் பூஜிப்போர் சர்வ மங்களத்தையும் சகலமான இஷ்ட சித்திகளையும் பெறுவரென்றும் தெரிவித்தவாறாயிற்று.

பிரமதேவனால் நிர்மிக்கப்பட்ட மூன்றாவது திருவுருவமான கௌரியாகிய சுவர்ணகாமாக்ஷிதேவி ஏகாம்பர நாதருடைய பத்தினியாய்த்தனித்து அவரது வாமபாகத்தில் உடனிருக்கப்பெற்ற

---

† வாதராஜர் சக்திஸ்வரூபமென்பது முதலத்தியாயத்தில் காண்க

வாதலால் இவ்வம்பிகையைச் சிவத்தோடு ஐக்கியமாகவும், அந்தச் சிவரூபத்தை இந்தச் சக்தியோடு ஐக்கியமாகவும் பாவித்து இருவரையும் ஒன்ருகப் பூஜனைசெய்தல் கூடாது. முன்னர் ஏகாம்பரநாதரையும் அதன்பின்னர் அம்பிகையையும் அர்ச்சித்தல்வேண்டும். இவ்வுண்மையுணராது கௌரியினிடத்தில் சங்கருடைய பாவனையும், சங்கரிடத்தில்கௌரிபாவனையும் செய்து பூஜிப்பவர் ஜன்மங்கள்தோறும் நரகத்தைபனுபவிப்பவராவர். இருவரையும் தனித்தனி அந்தந்தப் பாவனையாகவே செய்பவர் மங்களப் பிரதத்தையடைவர்.

இதனுல் சுவர்ணகாமாக்ஷியாகிய கௌரியைச் சிவஐக்கியமாகப் பாவித்துப் பூஜனைசெய்யாது தனியாகச்சக்தி பாவனைமாத்திரம் செய்து பூஜித்தல் வேண்டுமென்றும், அங்ஙனம் பூஜிப்பவர் மங்களத்தையடைவாரென்றும், ஐக்கியபாவனையாற் பூஜிப்பவர் நரகமடைவாரென்றும் தெரிவித்தவாருயிற்று.

இனி இரண்டு சக்திகளை ஒருவிதமாகவும் ஒரு சக்தியை மற்ருெருவிதமாகவும் பூஜித்ததற்குக் காரணம் வருமாறு.

பூஜனையாகிய ஆராதனை, நிர்க்குணபரமான ஆராதனை சகுணபரமான ஆராதனை என இருவகை. நிர்க்குணாராதனை சிரேஷ்டமெனவும் சகுணாராதனை கௌணமெனவும் சொல்லப்படும். நிர்க்குணமாயுள்ளது சிவமாதலால் அந்தச் சிவபரமாயுள்ள சக்தியை சிவசக்தி ஐக்கிய மாயாராதித்தல் நிர்க்குண ஆராதனை எனவும், சகுணமாயுள்ளது சக்தியாதலால் அச்சக்தி பரமாயுள்ள சக்தியையாராதித்தல் சகுண ஆராதனை எனவும் சொல்லப்படும். எங்ஙனமெனில், லலிதாதேவியாகிய திரிபுராம்பிகை நிர்க்குண ஸ்வரூபமாயுள்ள ஜோதிலிங்கத்தோடு ஐக்கியமா யிருப்பவளாதலாலும் தபஸ்காமாக்ஷியானவள் நிர்க்குண ஜோதிலிங்க ஐக்கியமாயுள்ள அந்தத்திரிபுராம்புகையினுடைய நெற்றியில் தோன்றினவளாதலாலும் அவ்விருசக்திகளும் நிர்க்குண ஜோதிலிங்க பரமாயுள்ளவர்கள். அவ்விரண்டு சக்திகளையும் சிவசக்தி ஐக்கியபாவனையாகிய நிர்க்குண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும். சுவர்ணகாமாக்ஷி விவாக உத்ஸவத்திற்கு அருகமாக லலிதாதேவியாகிய நிர்க்குண சக்தியினின்றும் தோன்றிய சகுணரூபியாகிய தபஸ்காமா

க்ஷியே சுவர்ணகாமாக்ஷியாக வந்தனளாதலால் அந்தக் காமாக்ஷி யைச்சகுண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும்.

இதனுல் காஞ்சிகாமகோடி பீடத்துக்கு ஈசையாய் வீற்றிருக்கும் தேவியார் இருவினைப் பட்டுழலும் ஆன்மகோடிகள்வேண்டும் போகங்களைக் கொடுத்து அவர்கட்கு அவ்விருவினையொப்பு வருவித்ததற்குப் போகமூர்த்தியாகிய சுவர்ணகாமாக்ஷியாகியும் இருவினையொப்புவாய்ந்த ஆன்மாக்கள் வேண்டும் தவநெறிகளைக் கொடுத்து அவர்கட்கு மலபரிபாகம்வருவித்ததற்கு யோகமூர்த்தியாகிய தபஸ்காமாக்ஷியாகியும், மலபரிபாகம்வந்த ஆன்மாக்கள் வேண்டும் மெய்ஞான முறைகளைக்கொடுத்து அவர்கட்குச் சக்திநிபாதம் வருவித்தற்கு ஞானமூர்த்தியாகிய லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையாகியும் இவ்வண்ணம் ஆன்மாகட்கு உண்டாக வேண்டிய இருவினை யொப்புமலபரிபாகம் சக்திநிபாதம் என்னும் மூன்றும் சிருஷ்டிப்பட்டுள்ள எல்லாவான்மாக்கட்கும் ஏககாலத்தில் உண்டாவதன்ருகலான்; இருவினை யொப்புவருவதற் கேதுவான ஆன்மாக்கள் சிலவாயும், மலபரிபாகம் வருவதற்கேதுவான ஆன்மாக்கள் சிலவாயும் சக்திநிபாதம் வருவதற்கேதுவான ஆன்மாக்கள் சிலவாயுமிருப்பன ஆகவே எவ்வவ்வான்மாக்கள் எவ்வக்காலங்களின்எவ்வவற்றை வேண்டுகின்ருர்களோ அவ்வவற்றை அவ்வவற்களுக்கு அருளிக் கொண்டேவாப்போக மூர்த்தியாயும் யோக மூர்த்தியாயும்,ஞானமூர்த்தியாயும் விளங்குகின்ருளென்றும் இந்த மூன்றனுள் யோகமும், ஞானமும் ஒன்றுக்கொன்று சம்பந்தமாய் நிற்பவாகலானும், போகம் இவற்றின்வேருய் நிறபதாகலானும், இம்மூன்றும் நிற்கும் முறைபோலவேயோகப் பிரதமாகிய தப்ஸ்காமாக்ஷியும் ஞானப்பிரதமாகிய திரிபுராம்பிகையும் ஒரு சம்பந்தமாயுள்ளாரென்றும், போகப் பிரதமாகிய சுவர்ணகாமாக்ஷி வேருய்த்தனித்து நிற்பவளென்றும், இதுபோலவே சிவமும் யோகஞானபரமான சக்திகளிடத்தில் வேருகாமற்கலந்தும்போக பாமான சக்தியினிடத்தில் கலவாது வேருயும் இருப்பதென்றும் உணாத்தி அக்காரணத்தால் யோகஞான் சக்திகளைச் சிவசக்தி ஐக்கியபாமான நிர்க்குண வாராதனையால் பூஜித்தல் வேண்டுமென்றும், போகசக்தியைச் சிவசக்திபேதபாமான சகுணவாராதனை யால் பூஜித்தல் வேண்டுமென்றும் விதித்ததெனக் கொள்க.